**தலைப்பு 295 – வாணிபத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன வாணிபத் திணைக்களத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிப்பொறுப்பு தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வில் நோக்கெல்லை**

---

தலைப்பு 295 – வாணிபத் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஒக்தோபர் 30 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக சட்ட அலுவல்கள் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 128(1) இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப்பொறுப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் ஏற்பாடுகளுடன் இணக்கம் காணப்படாமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|
| **நிதிப்பிரமாணம்** | | | |
| 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை வழங்கி கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கும் மற்றும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு மற்றும் / அல்லது நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல். | எதிர்பார்க்கப்பட்ட பிரதிபலனை பெற்றுக்கொள்ளாமை. | 2.1 |
| 128(1)(இ) | நிதிப்பிரமாணம் மற்றும் அரசின் ஏனைய குறைநிரப்பு | இணங்காமைகள் | 2.5 |

| | | | |
|---|---|---|---|
| | அறிவுறுத்தல்களையும் தனது திணைக்களம் பின்பற்றப்படுவதாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்தெனவும் | | |
| 128(1)(ஏ) | நிலுவையாகவுள்ள வருமதிகளை அறவிடுவதற்கு விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ள தெனவும் அத்தகைய வேலைகள் கையளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களால் நிலுவைப் பணத்தை அறவிடுவதனை துரிதப்படுத்துவதற்கு எடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பாக கீழ்மட்டத்தினரிடமிருந்து மூன்று மாதத்திற்கு ஒருமுறை அல்லது ஏனைய வகையில் ஒழுங்கு படுத்தப்பட்டதன் பிரகாரம் தமக்கு அறிக்கையிடப்படுகின்றதெனவும் | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் நிலுவையான கடன் மீதிகளை அறவிடல் | 2.4(ஆ) |
| 128(1)(ஐ) | அரசின் அலுவல்களை நிறைவேற்றும் போது எதிர்பார்க்கப்பட்ட சிக்கனம், செயற்திறன், ஒழுக்கமுடைமை, நேர்மை போன்ற விடயங்களுக்கு உரிய மதிப்பினை வழங்கி தமது திணைக்களத்தின் முயற்சிகள் செய்யப்படுவதெனவும் | முகாமைத்துவ நலிவுகள் | 2.2 |
| | | சொத்துக்கள் முகாமைத்துவத்திலான குறைபாடுகள் | 2.2 |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவம்வாய்ந்த கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

வெளிநாட்டு வாணிப பிரதிநிதித்துவம் தொடர்பில் வாணிப உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் செயற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது குறைவடைந்திருந்தது. அதற்கமைய இலங்கையினுள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிப்பதற்காக வாணிப உத்தியோகத்தர்களின் நேரடியான தலையீட்டின் அடிப்படையில் சுற்றுலா சந்தர்ப்பங்களை அறிமுகப்படுத்தும் தேவைப்பாடு காணப்பட்டது.

| செயற்பாடு | முன்னைய வருடத்துக்கு ஒப்பாக குறைவடைந்த சதவீதம் |
| --- | --- |
| மேம்படுத்தல் கண்காட்சிகளுக்காக இலங்கைக்காக உதவி நாடுகளின் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் | 24 |
| இலங்கைக்கு தூதரங்களின் நபர்களின் வருகை | 39 |
| உதவி நாடுகளில் தனிப்பட்ட சுற்றுலாக்கள் | 08 |
| இலங்கைக்கான ஆட்களின் சுற்றுலாக்கள் | 17 |

## 2.2 முகாமைத்துவ நலிவுகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1949 இன் 06 ஆம் இலக்க ஈட்டு அதிகாரச் சட்டம், 1947 இன் 12 ஆம் இலக்க நம்பிக்கைப் பொறுப்பாளர் கட்டளைச் சட்டம் மற்றும் 1990 இன் 14 ஆம் இலக்க உள்நாட்டு நம்பிக்கைப் பொறுப்பு உறுதிச்சீட்டு அதிகாரச்சட்டம் ஆகியவற்றின் கீழ் கடன் வழங்கும் சங்கங்களை அங்கீகரிக்கும் குழுவின் பரிந்துறைகளின் அடிப்படையில் கடன் வழங்கும் நிறுவகத்தை அதிகரிக்கும் அதிகாரம் வாணிப பணிப்பாளர் நாயகத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஈட்டு அதிகாரச் சட்டத்தின் 114(1) ஆம் பிரிவின் கீழ் கடன் வழங்கும் நிறுவனத்தை அங்கீகரித்தல் மற்றும் பரிந்துரை செய்வதற்காக உரிய அமைச்சரால் தலைவர் மற்றும் இரு அங்கத்தவர்கள் உள்ளடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்ட வேண்டியதுடன், அந்த நியமனங்கள் வர்த்தமானி அறிவித்தல் ஒன்றினூடாக பிரதிநிதித்துவப்படுத்தப்பட வேண்டும். 2014 பெப்ரவரி 28 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் அந்தக் குழுவானது 2014 சனவரி 13 ஆந் திகதி முதல் 2017 சனவரி 13 ஆந் திகதி முதல் 2017 சனவரி 12 ஆந் திகதி வரையான காலத்திற்கு நியமிக்கப்பட்டிருந்ததுடன், மீண்டும் அந்த குழுவானது நியமிக்கப்பட்டிருந்தது 2017 யூன் 13 ஆந் திகதி முதல் 2020 யூன் 12 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்காகும். அதற்கமைய 2017 சனவரி 13 முதல் 2017 யூன் 12 வரையான காலப்பகுதிக்கு குழுவொன்று இல்லாதிருந்ததுடன், அதனால் வாணிப பணிப்பாளர் நாயகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த கடன் வழங்கும் நிறுவனங்களை அங்கீகரிக்கும் பணி நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1973 செப்தம்பர் முதல் 2017 ஏப்ரல் வரையிலும் ஈட்டு அதிகாரச் சட்டத்தின் 114(1) ஆம் பிரிவின் கீழ் கடன் வழங்கும் 375 நிறுவனங்கள் அந்த சட்டத்தின் பணிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட கடன் வழங்கும் நிறுவனங்களாக திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது. அவற்றுள் 269 நிறுவனங்கள் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கிராமிய வங்கிகளாவதுடன், எஞ்சிய 106 நிறுவனங்களும் நிதிக் கம்பனிகள் மற்றும் வங்கி நிறுவனங்களாகும். இந்த கடன் வழங்கும் நிறுவனங்களை அங்கீகரித்தல் மாத்திரம் வாணிப திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுவதுடன், அங்கீகரிக்கப்பட்ட கடன் வழங்கும் நிறுவனங்களின் செயற்பாடு தொடர்பில் மேற்பார்வையொன்றை மேற்கொள்ளும் நடைமுறையொன்று 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. பொது மக்களின் நிதிப் பாதுகாப்பின் நிமித்தம் கடன் வழங்கும் நிறுவனங்களை மேற்பார்வை செய்யும் நடைமுறையொன்று அமுல்ப்படுத்தப்படாமையால் மக்கள் மோசடிகளுக்கு இரையாகும் அபாயம் நிலவுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(இ) முன்னுரிமை வியாபார உடன்படிக்கையின் கீழ் தீர்வை வரியற்ற பொருட்களை இறக்குமதி செய்வதற்காக வழங்கப்படும் மூலப்பொருள் சான்றிதழ் அரச அச்சகத்தினால் வழங்கப்பட்ட இலட்சினையுடன் பாதுகாப்பான முறையில் அச்சிடப்படும் வெற்று மூலப்பொருள் சான்றிதழ் எழுதுவினருக்கு கிடைத்த பின்னர் ஏற்றுமதியாளர்களுக்கு அவற்றை வழங்கும் சந்தர்ப்பம் வரையிலுமான செயன்முறை தொடர்பில் நிலவும் உள்ளகக் கட்டுப்பாடு மிகவும் நலிவான மட்டத்தில் காணப்பட்டது.

(ஈ) ஏற்றுமதியாளர்களின் தேவைப்பாட்டிற்கமைய ஒரே தடவையில் பெரும் எண்ணிக்கையான வெற்று சான்றிதழ்கள் திணைக்களத்தினால் இலவசமாக வெளியிடப்படும். எனினும், அவ்வாறு வெளியிடப்பட்ட வெற்று சான்றிதழ்கள் மீள திணைக்களத்திற்கு வந்து மூலப்பொருள் சான்றிதழ்களாவே மீண்டும் வழங்கப்படுகின்றமை தொடர்பில் எவ்வித ஒப்பீடும் இடம் பெற்றிருக்கவில்லை. அதன் காரணமாக வெளியிடப்பட்ட வெற்று சான்றிதழ்கள் மற்றும் மூலப்பொருள் சான்றிதழ் ஆகியவற்றுக்கிடையே இனங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

(உ) வாணிபத் திணைக்களத்தின் பணிப்பொறுப்பின் வியாபார உடன்படிக்கையின் கீழ் மூலப்பொருள் சான்றிதழ்களை வழங்குதல் பிரதான பணியொன்றாவதுடன், அந்த சான்றிதழ் பத்திரங்களை விநியோகிக்கும் பொறுப்பானது நிறைவேற்று தரத்திற்குரிய பதவிகளுக்கு (உதவிப் பணிப்பாளர் / பிரதிப் பணிப்பாளர் - வணிப) உரிய பணிப்பொறுப்புகளாக ஆட்சேர்ப்பு நடைமுறையின் அடிப்படையில் உள்ளடக்கப்பட்டிருந்தது. எனினும், திணைக்களத்தின் இரண்டாம் மட்டத்திலுள்ள பதவியொன்றான அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் ஈடுபட்டுள்ள ஒருங்கிணைந்த சேவைக்குரிய உத்தியோகத்தர்களால் மூலப்பொருள் சான்றிதழ்களை வழங்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

**2.3 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்**

---

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலப்பகுதியினுள் வாணிபத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்கள் மற்றும் மீளாய்வாண்டின் தகவல்களுக்குரிய கணக்காய்வு அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| **2013** | மீண்டுவருபவை | 95.98 | 92.64 | 3.34 | 3.48 |
| | மூலதனம் | 11.43 | 8.97 | 2.46 | 21.52 |
| | **மொத்தம்** | **107.41** | **101.61** | **5.80** | **5.40** |
| **2014** | மீண்டுவருபவை | 92.25 | 91.79 | 0.46 | 0.50 |
| | மூலதனம் | 14.75 | 13.23 | 1.52 | 10.31 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | **மொத்தம்** | **107.00** | **105.02** | **1.98** | **1.85** |
| **2015** | மீண்டுவருபவை | 105.65 | 96.00 | 9.65 | 9.13 |
| | மூலதனம் | 16.25 | 12.14 | 4.11 | 25.29 |
| | **மொத்தம்** | **121.90** | **108.14** | **13.76** | **11.29** |
| **2016** | மீண்டுவருபவை | 110.29 | 109.13 | 1.16 | 1.05 |
| | மூலதனம் | 10.50 | 10.12 | 0.38 | 3.62 |
| | **மொத்தம்** | **120.79** | **119.25** | **1.54** | **1.27** |
| **2017** | மீண்டுவருபவை | 122.30 | 115.77 | 6.53 | 5.33 |
| | மூலதனம் | 14.37 | 13.17 | 1.20 | 8.35 |
| | **மொத்தம்** | **136.67** | **128.94** | **7.73** | **5.65** |

**(அ) ஒதுக்கீட்டுக் கணக்கு**

மீளாய்வாண்டு தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமை**

03 மூலதன செலவின விடயங்கள் மற்றும் 08 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ரூபா 4.52 மில்லியன் கூட்டுத்தொகையான மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால், அந்த செலவின விடயங்களுக்குரிய நிதியேற்பாடுகளில் ரூபா 9.23 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், சேமிப்பானது அந்த செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேறிய நிதியேற்பாட்டில் 25 சதவீதம் 98 சதவீத வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

**2.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

திணைக்களத்திற்குரிய 29501 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| **செலவு** | | **பெறுவனவுகள்** | | **வரவு மீதி** | |
|---|---|---|---|---|---|
| **உச்ச எல்லை** | **உள்ளபடியான வை** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளபடியான வை** | **உச்ச எல்லை** | **உள்ளபடியானவை** |
| **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| 6.00 | 5.97 | 3.00 | 3.98 | 20.00 | 13.54 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக திணைக்களத்தின் புத்தகங்களிலுள்ள மீதிகள் மற்றும் திறைசேரியின் கணனி அச்சீட்டு மீதிகள் ஆகியவற்றுக்கிடையே 2005 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 416,550 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டதுடன், அந்த வேறுபாடு 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 திசெம்பர் 19 ஆந் திகதி ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் ஒருவரின் ரூபா 131,150 பெறுமதியான கடன் மீதி 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு முடியாது போயிருந்தது.

**2.5 சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்**

2013 யூலை 12 அந் திகதிய மற்றும் எஸ்ஏ/ஏஎஸ்/ஏஏ/சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்திற்கு சொந்தமான 05 வாகனங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.6 உள்ளக கணக்காய்வு**

2009 யூன் 09 ஆந் திகதிய பீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றிக்கையின் பிரகாரம் திணைக்களத்தின் பணிகள் தொடர்பான உள்ளக கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகள் வெளியிடப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

**2.7 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்**

‘‘நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டு நிகழ்ச்சி நிரல்’’ இன் பிரகாரம் ஒவ்வொரு அரச நிறுவனத்தினாலும் செயற்பட வேண்டியதுடன், மீளாய்வாண்டிற்குரிய திணைக்களத்தினால் தமது விடய எல்லைக்குட்பட்டதான பணிகள் தொடர்பில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பில் அறிந்திருந்தது. மேற்குறிப்பிடப்பட்டவாறு ஆண்டு 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பில் அறிந்திருத்தல் அடிப்படையில் வாணிப திணைக்களத்தினால் தமது விடயப்பரப்பிற்கமைய அடைந்து கொள்ளப்பட வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் திணைக்களத்தினால் உள்ளக சுற்றறிக்கைகள், வழிகாட்டிகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. தரவுகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கான நடைமுறையொன்று காணப்படவில்லை.

## 2.8 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்**

திணைக்களத்தின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளவாறான பதவியணியினர் மற்றும் வெற்றிடங்கள் மற்றும் மிகைப் பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | **ஊழியர் வகை** | **அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்** | **உள்ளபடியான பதவியணியினர்** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 66 | 58 | 08 |
| (ii) | இரண்டாம் மட்டம் | 02 | 02 | 00 |
| (iii) | மூன்றாம் மட்டம் | 62 | 45 | 17 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 21 | 15 | 06 |
| | **மொத்தம்** | 151 | 120 | 31 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கையின் சர்வதேச வாணிப அலுவல்கள் பணிகளுக்காக வசதிகளை வழங்கும் நிறுவனமொன்றாக இந்த திணைக்களத்தில் பணிகளில் முக்கியமான மேலதிக வாணிப பணிப்பாளர் பதவி மற்றும் இலங்கை நிர்வாக சேவையில் ஐ பதவி ஏற்படுத்தப்பட்ட திகதியிலிருந்து அதாவது 2014 யூன் 25 ஆந் திகதியிலிருந்தும், நூலகர் பதவியானது 1999 ஆம் ஆண்டு முதல் வெற்றிடமாக நிலவியது.

(ஆ) 2017 செப்தெம்பர் 25 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட சட்ட உத்தியோகத்தர் மற்றும் பொருளாதார நிபுனர் ஆகிய இரு பதவிகளும் 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் வெற்றிடமாக காணப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக பிரதி / உதவி வாணிப பணிப்பாளர் பதவிகள் 3, அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பதவிகள் 5, முகாமைத்துவ பதவிகள் 11 மற்றும் அலுவலக உதவியாளர் பதவிகள் 4 உம் வெற்றிடமாக நிலவுகின்றமை அவதானிக்கப்பட்டது. 2018 ஆம் ஆண்டின் போது அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மூவர் மற்றும் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் உத்தியோகத்தர்கள் இருவர் இணைப்பு செய்யப்பட்டிருந்தனர்.